بسم اللہ الرحمن الرحیم  نحمدہ ونصلی علی رسولہ الکریم  وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 11

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

11 ஷஅபான் 1437 ஹிஜ்ரி கமரி 19 மே 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**சிராகுத்தீன், தான் மரணிப்பதற்கு சில நாட்கள் முன்னதாக முபாஹலாவிற்கான ஓர் அறிவிப்பை தாளில் எழுதினார். அதில் தனது பெயரையும் எனது பெயரையும் குறிப்பிட்டு எங்கள் இருவரில் எவர் பொய்யரோ அவர் அழிந்து விட வேண்டும் என்று இறைவனிடம் துஆ செய்தார். இறைவனின் வல்லமை எவ்வாறு வெளிப்பட்டது என்றால் அந்த தாள் கூட எழுதுபவரின் கையில்தான் இருந்தது. அவர் அதை எழுதிக் கொண்டிருந்தார். அப்போது சிராகுத்தீன் தனது இரண்டு மகன்களுடன் நிரந்தரமாக (இவ்வுலகை விட்டுப்) பிரிந்து விட்டார்.**

فَاعْتَبِرُوْا يَا أُولِي الْأَبْصَارِ

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

பிறகு, இன்னொரு மகிழ்ச்சிக்கான சந்தர்ப்பம் நமது எதிரிகளுக்கு கிடைத்தது. எனது சீடராக இருந்த ஜம்முவைச் சார்ந்த சிராகுத்தீன் முர்தத் ஆகி விட்டார் (மார்க்கத்தைத் துறந்து விட்டுச் சென்று விட்டார்). அவர் முர்தத் ஆன பிறகு நான் 'தா∴பியுல் பலா வ மீயாரே அஹ்லுல் இஸ்தி∴பா' என்ற சிறு நூலில் அவர் தொடர்பாக இறைவனிடமிருந்து இறை அறிவிப்பைப் பெற்று அவர் இறை கோபத்திற்கு ஆளாகி அழிந்து விடுவார் என்பதை வெளியிட்டிருந்தேன். அப்போது சில மவ்லவிமார்கள் என்னை எதிர்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் அவருடன் நட்பு கொண்டனர். அவர் ஒரு நூலை எழுதினார். அதற்கு 'மினாரத்துல் மஸீஹ்' என்று பெயர் வைத்தார். அதில் என்னை 'தஜ்ஜால்' என்று கூறியிருந்தார். 'நான் தூதர் ஆவேன். இறைவன் அனுப்பியுள்ள தூதர்களில் ஒரு தூதர் ஆவேன்' என்ற தனது இல்ஹாமையும் அதில் வெளியிட்டிருந்தார். 'ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எனக்கு ஒரு தடியை வழங்கினார்கள். அதன் மூலம் அந்த தஜ்ஜாலை (அதாவது என்னை) நான் கொலை செய்ய வேண்டும்' என்று அதில் குறிப்பிட்டிருந்தார். 'மினாரத்துல் மஸீஹ்' என்ற நூலில் ஏறக்குறைய பாதி பகுதியில் 'இந்த நபர் தஜ்ஜால் ஆவார். எனது கைகளால் அவர் அழிந்து போவார்' என்ற விஷயமே எழுதப்பட்டிருந்தது. இறைவனும் ஈஸாவும் எனக்கு இந்த செய்தியைத்தான் தெரிவித்திருந்தனர் என்றும் கூறியிருந்தார். ஆனால், இறுதியில் நடந்தவற்றை மக்கள் கேள்விப்பட்டிருப்பர். அதாவது, இந்த நபர் 4 ஏப்ரல் 1906 -ல் தனது இரண்டு மகன்களுடன் பிளேக் நோயால் மரணமடைந்து எனது முன்னறிவிப்பை உண்மைப்படுத்தி விட்டுச் சென்றுள்ளார். மிகவும் நிராசையடைந்து அவர் உயிரை விட்டார். மேலும், மரணிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னதாக முபாஹலாவிற்கான ஓர் அறிவிப்பை தாளில் அவர் எழுதினார். அதில் தனது பெயரையும் எனது பெயரையும் குறிப்பிட்டு எங்கள் இருவரில் எவர் பொய்யரோ அவர் அழிந்து விட வேண்டும் என்று துஆ செய்தார். இறைவனின் வல்லமை எவ்வாறு வெளிப்பட்டது என்றால் அந்தத் தாள் கூட எழுதுபவரின் கையில்தான் இருந்தது. அவர் அதை எழுதிக் கொண்டிருந்தார். அப்போது சிராகுத்தீன் தனது இரண்டு மகன்களுடன் நிரந்தரமாக (இவ்வுலகை விட்டு) பிரிந்து விட்டார். فَاعْتَبِرُوْا يَا أُولِي الْأَبْصَارِ

என்னை 'தஜ்ஜால்' என்று கூறுகின்ற தங்களுக்கு இல்ஹாம்கள் வருவதாக வாதம் செய்கின்ற எனது எதிரிகள் இவர்களேயாவர். எந்த நபரும் இவர்களது முடிவைப் பற்றி சிந்திப்பதில்லை. சுருக்கமாகக் கூறுவதென்றால் மவ்லவிமார்கள் முர்தத் ஆன சிராகுத்தீனுக்கு துணையாக நின்ற பிறகும் கூட தங்களது நோக்கத்தை அடைய முடியவில்லை.

இதற்குப் பிறகு இன்னொரு சிராகுத்தீன் தோன்றினார். அதாவது டாக்டர் அப்துல் ஹக்கீம் கான் தோன்றினார். இந்த நபரும் என்னை தஜ்ஜால் என்று கூறினார். முதலில் உள்ள சிராகுத்தீனைப் போன்று இவரும் தன்னைத் தூதர்களில் ஒருவர் என்று கூறுகின்றார். முதல் சிராகுத்தீனைப் போன்று என்னைக் கொல்வதற்காக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இவருக்கு தடியை வழங்கினார்களா? இல்லையா? என்பது தெரியவில்லை.☆

ஆணவத்திலும், தற்பெருமையிலும் இவர் முந்தைய சிராகுத்தீனை விட மிகவும் முன்னேறி விட்டார். ஏசிப் பேசுவதில் கூட அவரை விட அதிகமாக பயிற்சி பெற்றவராக இவர் இருக்கின்றார். ஆட்சேபனை செய்வதிலும் அவரை விட இவரது பாதங்கள் முன்னோக்கி இருக்கின்றன. இந்த ஆத்திரமடையும் இயல்பை உடைய ஒரு பிடி மண்ணுக்கு ஒப்பான மனிதர் முர்தத் ஆகி விட்டதாலும் நம்மை எதிர்க்கின்ற மவ்லவிமார்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்களுக்கு ஒரு கருவூலம் கிடைத்தது போன்று அது இருந்தது. ஆனால், அவர்கள் இந்த அளவு மகிழ்ச்சியடையக் கூடாது. மேலும் முதலில் வந்த சிராகுத்தீனை அவர்கள் நினைவு கூற வேண்டும். அத்தகைய மகிழ்ச்சிகளைப் பெறுவதிலிருந்தும் அவர்களை தோல்வியடையச் செய்த அதே இறைவன்தான் இப்போதும் இருக்கின்றான். அவனது முன்னறிவிப்பானது எவ்வாறு முதல் சிராகுத்தீனின் முடிவைப் பற்றிய செய்தியை வழங்கியதோ அவ்வாறே எல்லாவற்றையும் நன்கறிந்த அனைத்தையும் பற்றிய அறிவுள்ள அந்த இறைவன் இந்த இரண்டாவது சிராகுத்தீன்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*

---

அடிக்குறிப்பு: ☆ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் என்னை கொலை செய்வதற்காக சிராகுதீனுக்குத் தடியைத் தந்தார்கள் என்றால் இந்த வேகமும் கோபமும் அவரது உள்ளத்தில் ஏன் எழுந்தது? அவர் மரணமடைந் -திருப்பதை உலகில் நான் வெளிப்படுத்தி அதைப் பற்றிய செய்தியை வெளியிட்டிருப்பதால் அவர் வெறுப்படைந்து விட்டார் என்றால் இது அவர்களது தவறாகும். இந்தச் செய்தியை நான் வெளியிடவில்லை. நம்மைப் போன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் யாருடைய படைப்பினமாக இருக்கின்றார்களோ அந்த இறைவன் இதனை வெளியிட்டுள்ளான். உங்களுக்கு இதில் சந்தேகம் இருந்தால் مَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ முஹம்மது ஒரு தூதரே அன்றி (வேறு) அல்லர். அவருக்கு முன்னுள்ள தூதர்கள் காலஞ்சென்று விட்டனர் (3:155) என்ற வசனத்தை فَلَمَّا تَوَفَّيْتَنِيْ كُنْتَ اَنْتَ الرَّقِيْبَ عَلَيْهِمْ நீ என்னை மரணிக்க செய்த பிறகு நீயே அவர்களை கண்காணிப்பவனாக இருந்தாய் (5:118) என்ற வசனத்தையும் பார்க்கவும். என்னை அழிப்பதற்காக எவரிடம் அவர்கள் தடியை வழங்குகின்றார்களோ அந்த நபரே அழிந்து விடுவது வியப்பிற்குரியதாக இருக்கின்றது. இது எத்தகைய சிறந்த தடியாக இருக்கின்றது? இரண்டாவது சிராகுத்தீனான அப்துல் ஹகீம், தானும் கூட முதல் சிராக்குத்தீனைப் போன்ற ஒரு முன்னறிவிப்பைச் செய்துள்ளார் என்று நான் கேள்விப்படுகின்றேன். ஆனால், அதில் ஏதாவதொரு தடியைப் பற்றிய குறிப்பு இருக்கின்றதா? இல்லையா? என்று தெரியவில்லை.


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

திருக்குர்ஆனில் தொழுகையை நிறைவேற்றுவது பற்றி பல்வேறு இடங்களில் கவனமூட்டப்பட்டுள்ளது. சில இடங்களில் தொழுகையைப் பாதுகாப்பது பற்றி கட்டளையிடப்பட்டுள்ளது. சில இடங்களில் முறைப்படி தொடர்ந்து தொழுவது குறித்த கட்டளை உள்ளது. சில இடங்களில் குறித்த நேரத்தில் தொழுவது பற்றிய கட்டளை உள்ளது. பிறகு அதன் நேரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழுகையை இன்னின்ன நேரங்களில் நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நம்பிக்கை கொண்டவர் நடைமுறைப்படுத்த வேண்டும். சுருக்கமாக, தொழுகையை நிறைவேற்றுவது, அதன் கடமை ஆகியவை பற்றி மீண்டும் மீண்டும் இறைவன் ஒரு நம்பிக்கை கொண்டவருக்கு நினைவூட்டியுள்ளான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன், மனிதப் படைப்பின் நோக்கமே இறைவணக்கம் செய்வதாகும் என்று கூறியுள்ளான்.

நாம் இக்காலத்தில் இமாமை ஏற்றுக் கொண்டிருப்பது நமது நற்பேறாகும். அன்னார் நமக்கு இறை வணக்கத்தின் சரியான வழிமுறையைக் கற்றுத் தந்தார்கள். எதற்காக இறை வணக்கம் செய்ய வேண்டும் என்ற ஞானத்தை கற்றுத் தந்தார்கள். மீண்டும் மீண்டும் பல்வேறு இடங்களில் தமது ஜமாஅத்திற்கு தொழுகையின் பக்கம் கவனமூட்டினார்கள். அதன் விபரங்களையும் சிறப்பம்சங்களையும் கூறினார்கள். அதன் நுட்பமான ஞானத்தையும் தேவையையும் கூறினார்கள். அதன் மூலம் நாம் நமது இறை வணக்கத்தின் முக்கியத்துவத்தைப் புரியவும் அதில் அழகை உருவாக்குவதற்காகவும் அவ்வாறு செய்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் தொழுகையின் முக்கியத்துவம், ஞானம், தொழுகையைப் பேணுவது, தொழுகையிலுள்ள இன்பம் போன்ற விஷயங்களைப் பெறுவது தொடர்பாக ஹுஸூர் அய்யஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள மிக முக்கியமான போதனைகள்

பள்ளிவாயிலின் அருகில் இருப்பவர்கள், அந்த சுற்று வட்டாரத்தில் இருப்பவர்கள் முறைப்படி தமது பள்ளிவாயிலுக்கு அல்லது தொழுகை மையங்களுக்கு ஃபஜ்ர் தொழுகைக்காக செல்ல வேண்டும். இங்கு மட்டுமல்ல உலகின் எல்லா நாடுகளிலும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். பள்ளிவாயிலை நிரப்ப வேண்டும். குறிப்பாக, பொறுப்பாளர்கள் ஜமாஅத் பணியாளர்கள், வாழ்வை அர்ப்பணித்தவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் தொழுகையின் வருகையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட முடியும்.

எனவே, எவனது கட்டளையினாலேயே எல்லாம் நடக்கின்றனவோ அவன் முன்னால் குனிவதே அவசியமாகும். அவனுடன் தொடர்பு ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே, தொழுகைகள் பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்ற தேவையாக இருக்கும் அதே வேளையில் அவை அல்லாஹ்வின் முன் குனியும் போது ஆபத்துகள், துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கின்றன. பல பணிகள் வெளிப்படையாகப் பார்க்கும்போது சாத்தியமற்றவையாகத் தோன்றுகின்றன. ஆனால் அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்ளும் போது அவை சாத்தியமானவை ஆகி விடுகின்றன.

கராச்சி ஜமாஅத்தின் முன்னாள் அமீரான மதிப்பிற்குரிய மர்ஹூம் ஷேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய அஷ்கரி பேகம் சாஹிபா அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 15 ஏப்ரல் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் 15 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ

وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

திருக்குர்ஆனில் தொழுகையை நிறைவேற்றுவது பற்றி பல்வேறு இடங்களில் கவனமூட்டப்பட்டுள்ளது. சில இடங்களில் தொழுகையைப் பாதுகாப்பது பற்றி கட்டளையிடப்பட்டுள்ளது. சில இடங்களில் முறைப்படி தொடர்ந்து தொழுவது குறித்த கட்டளை உள்ளது. சில இடங்களில் குறித்த நேரத்தில் தொழுவது பற்றிய கட்டளை உள்ளது. பிறகு அதன் நேரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழுகையை இன்னின்ன நேரங்களில் நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நம்பிக்கை கொண்டவர் நடைமுறைப்படுத்த வேண்டும்.

சுருக்கமாக, தொழுகையை நிறைவேற்றுவது, அதன் கடமை ஆகியவை பற்றி மீண்டும் மீண்டும் இறைவன் ஒரு நம்பிக்கை கொண்டவருக்கு நினைவூட்டியுள்ளான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன், மனிதப் படைப்பின் நோக்கமே இறைவணக்கம் செய்வதாகும் என்று கூறியுள்ளான். அல்லாஹ் وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ *வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்*. அதாவது ஜின் மற்றும் மனிதப் படைப்பின் நோக்கமே இறை வணக்கமாகும். (51:57) ஆனால், மனிதன் இந்த நோக்கத்தை அறிவதில்லை. அதிலிருந்து தூரம் விலகி இருக்கின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ''அல்லாஹ் நீங்கள் படைக்கப்பட்டதன் அசல் நோக்கம், நீங்கள் அல்லாஹ்வுக்கு இறை வணக்கம் செய்ய வேண்டும் என்று வைத்துள்ளான். ஆனால் இந்த அசலான, இயல்பான நோக்கத்தை விட்டு விட்டு விலங்குகளைப் போன்று உண்ணல், குடித்தல் மற்றும் தூங்குதலே வாழ்க்கை எனக் கருதுகின்றனர். இவர்கள் இறைவனது அருளிலிருந்து தூரமாக விலகிப் போய் விடுகிறார்கள். அவர்களுக்கு இறைவனிடமிருந்து எந்த உத்திரவாதமும் இல்லை.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 182; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.)

எனவே, இந்த நோக்கத்தையே நம்பிக்கை கொண்டதாக வாதிப்பவர் தனது முழுமையான கவனத்துடன் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகிக் கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் அரள்களைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் இறை வணக்கத்தின் குறிக்கோள் எவ்வாறு நிறைவேறுகிறது? இதற்காக இஸ்லாம் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுவதைக் கட்டளையிடுகிறது. ஒரு அறிவிப்பு ஹதீஸில் வருகிறது. தொழுகை வணக்கங்களின் சத்து ஆகும். இந்த சத்தைப் பெற்றவாறே நாம் இறைவணக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். நாம் இக்காலத்தில் இமாமை ஏற்றுக் கொண்டிருப்பது நமது நற்பேறாகும். அன்னார் நமக்கு இறை வணக்கத்தின் சரியான வழிமுறையைக் கற்றுத் தந்தார்கள். எதற்காக இறை வணக்கம் செய்ய வேண்டும் என்ற ஞானத்தை கற்றுத் தந்தார்கள். மீண்டும் மீண்டும் பல்வேறு இடங்களில் தமது ஜமாஅத்திற்கு தொழுகையின் பக்கம் கவனமூட்டினார்கள். அதன் விபரங்களையும் சிறப்பம்சங்களையும் கூறினார்கள். அதன் நுட்பமான ஞானத்தையும் தேவையையும் கூறினார்கள். அதன் மூலம் நாம் நமது இறை வணக்கத்தின் முக்கியத்துவத்தைப் புரியவும் அதில் அழகை உருவாக்குவதற்காகவும் அவ்வாறு செய்தார்கள்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறியவற்றிலிருந்து மேற்கோள்களை எடுத்து வைப்பேன். சில வேளைகளில் தட்பவெப்பநிலைகளின் கடுமை அல்லது இரவுகள் சிறியதாக இருப்பதால் குறிப்பாக ஃபஜ்ர் தொழுகையில் சோம்பல் ஏற்பட்டு விடுகிறது. பொதுவாக ளுஹர், அஸர் தொழுகைகளைச் சேர்த்து தொழுகின்றனர் அல்லது சிலர் வேலைப்பளுவின் காரணமாக சரியாகத் தொழுவதில்லை. பருவ நிலையின் உக்கிரத்தினாலோ அல்லது இரவில் முழுமையான தூக்கமின்மையாலோ வேலைப்பளுவாலோ மக்கள் தொழுகையை விட்டு விடுகின்றனர் அல்லது சிலர் மூன்று தொழுகைகளை ஒன்றாக சேர்த்து தொழுது விடுகின்றனர். தற்போது இப்பகுதியில் இந்த நாடுகளில் தொழுகை நேரம் வேகமாக பின்னால் வருகிறது. ஃபஜ்ர் தொழுகையில்

ஒன்று அல்லது ஒன்றரை ஸஃப் குறையத் தொடங்கி விட்டது. சில நேரங்களில் வெளியூரில் இருந்து வந்த மக்களின் காரணமாக அவ்வப்போது எண்ணிக்கை அதிகமாகிறது. ஆனால், உள்ளூர் மக்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பள்ளிவாயிலின் அருகில் இருப்பவர்கள், அந்த சுற்று வட்டாரத்தில் இருப்பவர்கள் முறைப்படி தமது பள்ளிவாயிலுக்கு அல்லது தொழுகை மையங்களுக்கு ஃபஜ்ர் தொழுகைக்காக செல்ல வேண்டும். இங்கு மட்டுமல்ல உலகின் எல்லா நாடுகளிலும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். பள்ளிவாயிலை நிரப்ப வேண்டும். குறிப்பாக, பொறுப்பாளர்கள் ஜமாஅத் பணியாளர்கள், வாழ்வை அர்ப்பணித்தவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் தொழுகையின் வருகையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட முடியும்.

தொழுகையை முறைப்படியும் தொடர்ச்சியாகவும் தொழுவது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சபையில் கூறினார்கள்:

“தொழுகையை தொடர்ச்சியாக தொழுது வாருங்கள். சிலர் ஒரே தொழுகையை மட்டும் தொழுகிறார்கள். நினைவில் கொள்ளுங்கள். தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு புதிய ஜமாஅத் வந்தது. அவர்கள் தொழுகையை மன்னிக்க வேண்டினர்.” அதிகமான பணிகள் இருப்பதாகவும் வேலைப்பளுவின் காரணமாகவும் தொழுகையை மன்னித்து விடுங்கள் என்றனர்.

அன்னார் கூறினார்கள்: “எந்த மார்க்கத்தில் செயல் இல்லையோ அந்த மார்க்கமும் ஒன்றுமில்லை. எனவே, இதனை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப செயல்படுங்கள். அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ்வின் அடையாளங்களுள் ஓர் அடையாளம் வானமும் பூமியும் அவனது கட்டளையினாலேயே நிலைநிற்க முடியும். சில நேரங்களில் எவரது இயல்புகள் இயற்கை வாதத்தின் பக்கம் சாய்ந்துள்ளதோ அவர்களது இயல்பு இயற்கை மதம்தான் பின்பற்றத்தக்கது என்கிறது. ஏனெனில் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கின்ற விதிகளைக் கடைபிடிக்கா விட்டால் இறையச்சம் மற்றும் தூய்மையினால் என்ன பயன் ஏற்படும்? என்கிறார்கள்.” உலகியல்வாதிகள் இக்கருத்தின் பக்கம் செல்கிறார்கள். பல உலகியல் விதிமுறைகள் உள்ளன. அவற்றை கடைபிடிக்க வேண்டும் என்கிறார்கள். அவை உலகியல் சார்ந்த விதிமுறைகளாகும். அவை உடல் நலடத்துடன் தொடர்புடையவையாகும். அதன்படி செயல்படா விட்டால் உடல்நலம் கெடும். பிறகு இறையச்சம், தூய்மை எவ்வாறு நிலைநிற்க முடியும்? மேலும் அதனால் என்ன பயன் ஏற்படும்? என்று கேட்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “தெளிவு பெறுங்கள். அல்லாஹ்வின் அடையாளங்களுள் ஓர் அடையாளமாவது, சில நேரங்களில் மருந்துகள் செயலிழந்து விடுகின்றன. உடல் நலத்தைப் பாதுகாக்கும் காரணிகளும் பயன்படுவதில்லை. மருந்துகளும் பயன்படுவதில்லை. மருத்துவர்களும் பயன்படுவதில்லை. இதற்கு நேர் எதிராக அல்லாஹ்வின் கட்டளையிடப்படும்போது தலைகீழாக இருப்பவர் நேராக நிற்கின்றார்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, அல்லாஹ்வின் அருளே அசல் விஷயமாகும். உடல் நலம் தான் எல்லாம் என்பதும் இன்னின்ன வேலைகளைச் செய்து கொண்டிருந்தால் உடல் நலமாக இருக்கும் அல்லது நோய்வாய்ப்பட்டால் இன்ன மருந்தை உட்கொண்டால் உடல் நலம் ஏற்படும் என்பதெல்லாம் தவறாகும். இவை அனைத்தும் இறைவனது கட்டளையினால் மட்டுமே இயங்குகின்றன. அல்லாஹ்வின் கட்டளை இல்லையென்றால் எல்லாமே வீணாகி விடும்.

எனவே, எவனது கட்டளையினாலேயே எல்லாம் நடக்கின்றனவோ அவன் முன்னால் குனிவதே அவசியமாகும். அவனுடன் தொடர்பு ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே, தொழுகைகள் பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்ற தேவையாக இருக்கும் அதே வேளையில் அவை அல்லாஹ்வின் முன் குனியும் போது ஆபத்துகள், துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கின்றன. பல பணிகள் வெளிப்படையாகப் பார்க்கும்போது சாத்தியமற்றவையாகத் தோன்றுகின்றன. ஆனால் அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்ளும் போது அவை சாத்தியமானவை ஆகி விடுகின்றன. எனவே, எது நடக்கிறதோ அது இறை கட்டளையினாலேயே நடக்கின்றன. எனவே, அல்லாஹ்வின் அருளை மிக அதிகமாக சேகரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: “அசல் விஷயமாவது, இறைவன் என்ன விரும்புகிறானோ செய்கிறான். பாழடைந்தவற்றை குடியிருப்புகளாகவும் குடியிருப்புகளை பாழடைந்தவையாகவும் ஆக்கி விடுகிறான். பாருங்கள். பாபிலோன் நகரத்தை என்ன செய்தான்? எந்த இடத்தை குடியிருப்பாக்கி விட வேண்டும் என்று மனிதன் விரும்புகிறானோ அதனை தனது விருப்பத்தால் இறைவன் பாழடைந்ததாக்கி விட்டான். அது ஆந்தைகளின் தங்குமிடம் ஆகி விட்டது. எந்த இடத்தை பாழடைய விட வேண்டும் என்று மனிதன் விரும்புகிறானோ அந்த இடத்தை இறைவன் முழு உலக மக்களின் திரும்புமிடம் ஆக்கி விட்டான்.” அதாவது மக்கா மற்றும் இறை இல்லமான கஅபா ஆகும்.

எனவே, நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இறைவனை கை விட்டு விட்டு தமது திட்டங்கள் மற்றும் மருந்துகள் மீது நம்பிக்கை வைப்பது முட்டாள்தனமாகும். புதிய வாழ்வு போன்று தெரியும் அளவுக்கு ஒரு மாற்றத்தை உங்கள் வாழ்வில் உருவாக்குங்கள். இஸ்திக்ஃபார் அதிகமாக செய்யுங்கள். எவருக்கு அதிகமாக உலகியல் பணிகள் காரணமாக குறைந்த நேரமே கிடைக்குமோ அவர்கள் எல்லாரையும் விட அதிகமாக அஞ்ச வேண்டும். “உலகியல் வேலைப்பளு நமக்கு மிகவும் அதிகமாகும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். இறை வணக்கம் செய்யவும், தொழவும் நேரமில்லை என்று கருதினால் எல்லாரையும் விட அதிகமாக அவர் அஞ்ச வேண்டும்.” வேலை செய்யக்கூடியர்களில் பெரும்பாலார் இறைவன் கூறியுள்ள கடமையை நிறைவேற்றாமல் இருந்து விடுகின்றனர். எனவே, அவர்கள் ளுஹர், அஸர் தொழுகைகளையும் மற்றும் மக்ரிப், இஷா தொழுகைகளையும் சேர்த்து தொழுவது அனுமதிக்கப்பட்டதாகும்”

அன்னார் கூறுகின்றார்கள்: “நான் இதனையும் அறிகிறேன். பணியின் காரணமாக தொழுகைக்காக அனுமதி கேட்டால் அனுமதி கிடைக்கவே செய்கிறது. மனிதன் பணி செய்யும் இடத்தில் மேலதிகாரிகளிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தால் அனுமதி கேட்டால் தொழுவதற்கு அனுமதி வழங்கி விடுகிறார்கள்.”

அவர்கள் கூறுகின்றார்கள்: “மேலதிகாரிகளிடமிருந்து அவர்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளுக்கு குறிப்பான வழிகாட்டல்கள் கிடைத்திருக்கின்றன.” சில இடங்களில் வழிகாட்டல்கள் கிடைக்கவும் செய்கின்றது. மேலும் கூறுகின்றார்கள்: “தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. அல்லாஹ்வின் கட்டளைகள் மற்றும் அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய கட்டளைகளில் அநீதி மற்றும் வரம்புமீறல் செய்யாதீர்கள். உங்கள் கடமைகளை மிகவும் நேர்மையுடன் நிறைவேற்றுங்கள்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு வெறுமனே தொழுகை மட்டுமல்ல. அதற்கு மேலும் அன்னார் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள்.

நஃபில் மற்றும் தஹஜ்ஜுத் தொழுமைகள் பற்றி கவனமூட்டியவாறு அன்னார் கூறினார்கள்: “இந்த வாழ்வின் முழு மூச்சும் உலகப் பணிகளிலேயே கழித்து விட்டால் மறுவுலகிற்காக என்ன கருவூலத்தை வைத்திருக்கிறீர்கள்?” உங்கள் ஒவ்வொரு மூச்சையும் வினாடியையும் உலகை சம்பாதிப்பதற்காகவே செலவு செய்து விட்டால் மறுவுலகிற்காக என்ன சேர்த்து வைத்துள்ளீர்கள்?

அன்னார் கூறுகின்றார்கள்: “தஹஜ்ஜுத்திற்காக குறிப்பாக எழுங்கள். மிகவும் ஆர்வத்துடன் அத்தொழுகையை நிறைவேற்றுங்கள். இடைப்பட்ட தொழுகைகளில் பணிகளின் காரணமாக சோதனை ஏற்படுகிறது. உணவளிப்பவன் அல்லாஹ்வே ஆவான். தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். ளுஹர், அஸர் தொழுகை அவ்வப்போது சேர்த்து தொழலாம். பலவீனமான மக்கள் இருப்பர் என்பதை அல்லாஹ் அறிகிறான். எனவே, இந்த சலுகையை அவன் வைத்துள்ளான். மூன்று தொழுகைகளை சேர்த்து தொழுவதற்கு அந்த சலுகை கிடையாது. பணிகள் மற்றும் ஏனைய பல விவகாரங்களில் மக்கள் தண்டனையைப் பெறுகிறார்கள். (தண்டனைக்குரிய வேலையைச் செய்து விடுகிறார்கள்.) அல்லாஹ்வுக்காக கஷ்டப்பட்டால் அது எவ்வளவு நல்லது?” (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 6; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) உலகியல் பணிகளில் மக்கள் தண்டனையைப் பெறுகிறார்கள். தொழுகையில் நிறைவேற்றுவதற்காக சிறிது கஷ்டப்படுவார் எனில் அது அவருக்கு இலாபமே இலாபம் ஆகும். எனவே, ஒரு நம்பிக்கையாளர் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இப்போது இரவுகள் சிறிதாகிக் கொண்டிருக்கின்றன. இது உங்களை தொழுகையை நிறைவேற்றுவதை விட்டு தடுக்கக் கூடாது. அல்லது முற்றிலும் அவற்றை விட்டு விடச் செய்து விடவும் கூடாது. அல்லது உலகியல் வேளைப்பளு வழியில் தடையாக ஆகவும் கூடாது. இந்த அடிப்படையில் நாம் எப்போதும் நமது நஃப்ஸை கணக்கிட்டு வர வேண்டும். நம்மில் பலர் தொழுகையை ஒரு கடமை என்று நினைத்து நிறைவேற்றுகின்றனர். ஆனால், அதன் உண்மையை சரியாக அறிவதில்லை.

அதனை தெளிவுபடுத்தியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “தொழுகை என்றால் என்ன? அது சிறப்பான துஆவாகும். ஆனால் மக்கள் இதனை அரசர்களின் வரியாகக் கருதுகின்றனர். (வரி விதிக்கப்பட்டது போன்று கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டு தொழுகின்றனர்.) அறிவற்றவர்கள் இவ்வளவு கூட அறிவதில்லை. இதனால் இறைவனுக்கு என்ன தேவை இருக்கின்றது? தன்னிறைவு பெற்ற அந்த இறைவனுக்கு இதற்கு என்ன தேவை ஏற்பட்டு விட்டது? மனிதன் துஆ மற்றும் தஸ்பீஹ் தஹ்லீலில் ஈடுபடுவதால் இறைவனுக்கு என்ன பயன் தரப்படுகிறது? மாறாக, மனிதனுக்குதான் அதில் பயன் இருக்கிறது. அவன் இந்த வழிமுறை மூலம் தனது குறிக்கோளை அடைந்து விடுகிறான்.”

அவர்கள் கூறுகின்றார்கள்: “எனக்கு இதனை பார்த்து மிகவும் ஆதங்கம் ஏற்படுகிறது. தற்காலத்தில் இறைவணக்கம், தக்வா, மார்க்க உணர்வு ஆகியவற்றில் அன்பு இல்லை. இதற்கு காரணம் பொதுவான விஷம் தோய்ந்த சம்பிரதாயங்கள் ஆகும். இதனால் அல்லாஹ்வின் மீது அன்பு குளிர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. இறை வணக்கத்தில் இருக்க வேண்டிய சுவை இல்லாமல் போய் விடுகிறது. உலகில் எந்தவொரு பொருளிலும் அல்லாஹ்வினால் சிறப்பான ஒரு சுவை வைக்கப்படாமல் இல்லை. அதிக சுமைமிக்க உணவின் சுவையை ஒரு

நோயாளியால் உணர முடிவதில்லை. அதனை கசப்பானதாகவும் முற்றிலும் இனிப்பு இல்லாததாகவும் கருதுகிறார். நோயின் காரணமாக நாவில் சுவை இல்லாமல் போய் விடுகிறது.'' அதுபோன்று இணை வணக்கத்தில் இன்பத்தைப் பெறாதவரும் தமது நோயைக் குறித்து கவலைப்பட வேண்டும். ஏனெனில் நான் கூறியது போன்று உலகில் இறைவன் ஏதாவது ஒரு இன்பத்தை வைக்காத எந்தவொரு பொருளும் இல்லை. அல்லாஹ் மனித குலத்திற்கு தன்னை இபாதத் செய்வதற்காக படைத்துள்ளான் எனில் பிறகு அந்த இறை வணக்கத்தில் அவனுக்கு ஒரு சுவையோ இன்பமோ வைக்காமல் போவதற்கு என்ன காரணம் இருக்கிறது? ''ஒருபுறம் அல்லாஹ் மனிதனைப் படைத்ததே இறை வணக்கத்திற்காகத்தான் என்று கூறுகிறான். பிறகு இன்னொருபுறம் அதில் எந்த இன்பத்தையும் வைக்காமல் இருப்பானா? அதில் சுவையும் இன்பமும் இருக்கிறது என்றால் அதனை பெறுபவர் எவராவது இருக்க வேண்டும் அல்லவா? அல்லாஹ் மனிதனை இறை வணக்கத்திற்காகத்தான் படைத்துள்ளான். وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنَ *வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்* – மனிதன் இறைவணக்கத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளான் எனில் பிறகு இறை வணக்கத்தில் சுவையையும் ரசனையையும் இன்பத்தையும் மிக அதிகமாக வைத்திருப்பது அவசியமாகும். இதனை நாம் அன்றாட அனுபவங்களிலிருந்து நன்றாக உணர முடியும். ஒவ்வொரு பணியிலும் அல்லாஹ் சுவையையும் இன்பத்தையும் வைத்துள்ளான். அன்றாட பணிகளிலிருந்து அது தெரிய வருகிறது.''

அன்னார் கூறுகின்றார்கள்: ''உதாரணமாக, தானியம் பயிர் வகைகள் போன்ற உண்ணக்கூடிய பொருள்கள், பருகக்கூடியவைகள் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. மனிதன் அதில் சுவையை ரசனையை உணருவதில்லையா? (நல்ல ருசியான உணவு சமைக்கப்பட்டால் பெரும் இன்பம் ஏற்படுகிறது.) அதன் சுவையை உணர அவரது வாயில் ஒரு நாவு இல்லையா? ஓர் அழகான பொருளை அது ஜடப்பொருளாகவோ, தாவரமாகவோ, விலங்காகவோ, மனிதனாகவோ இருக்கலாம். அதிலிருந்து மனிதன் இன்பத்தைப் பெறுவதில்லையா? (உணவின் சுவையையும் பெறுகிறார். அழகைப் பார்க்கும் போது கண்கள் மூலமாக இன்பத்தைப் பெறுகிறார்.) அழகிய குரலைக் காது கேட்கும் போது உள்ளம் மகிழ்ச்சி அடைவதில்லையா? (அல்லாஹ் காது தந்திருக்கிறான். காதின் மூலம் இனிய குரலைக் கேட்கும் போது உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது.) இந்த விஷயத்திற்காக இறை வணக்கத்தில் இன்பம் இல்லை என்று கூறப்படுவதற்கு வேறு ஏதாவது சான்றும் வேண்டுமா? இறைவன் படைத்த ஒவ்வொரு பொருளிலும் கண்டிப்பாக இன்பம் இருக்கிறது. ஆனால் இறை வணக்கத்தில் மட்டும் இன்பம் இல்லை என்பது எப்படி இருக்க முடியும்? இந்த அனைத்து விஷயங்களும் அல்லாஹ் இறை வணக்கத்தில் இன்பத்தை வைத்திருக்கிறான் என்பதற்கு ஆதாரமாகும்.''

அன்னார் கூறுகின்றார்கள்: ''ஆண்களையும் பெண்களையும் ஜோடியாக படைத்திருப்பதாக அல்லாஹ் கூறுகிறான். ஆணிற்கு விருப்பத்தை ஏற்படுத்தியுள்ளான். அதில் நிர்பந்தம் எதுவும் இல்லை. அல்லாஹ் அதில் ஓர் இன்பத்தையும் வைத்துள்ளான். இனப்பெருக்கம் செய்வது மட்டுமே நோக்கமாக வைக்கப்பட்டிருக்கும் என்றால் இந்த நோக்கம் நிறைவேறி இருக்காது. இறைவனது அசல் நோக்கம் அடியார்களை உருவாக்குவதாகும். இந்த இனப்பெருக்கத்திற்காக ஆண் பெண் தொடர்புகளை நிலைநாட்டினான். அத்துடன் அதில் அவன் இன்பத்தையும் வைத்தான். அறிவற்றவர்களுக்கோ அந்த இன்பமும் குறிக்கோளாக இருக்கின்றது. சில உலகியல்வாதிகள் இதுவே நமது நோக்கம் என்று கருதுகிறார்கள்.''

அன்னார் கூறுகின்றார்கள்: ''இதைப் போன்று இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax – வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும்.''

அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஒரு நோயாளி மிக மிக சுவையான உணவின் இன்பத்திலிருந்து விலகியிருப்பது போன்று நிச்சயமாக அதே போன்று பேறிழந்த மனிதனும் இறை வணக்கத்திலிருந்து இன்பம் பெற இயலாமல் இருக்கிறான்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடிக்கப்பட்டது) ஒரு நோயாளிக்கு தனது நோயின் காரணமாக வாய் கசப்பு இருக்கின்ற காரணமாக மிக மிக சுவையான உணவும் கூட இன்பம் தருவதில்லை. அதன் பொருள் உணவு மோசம் என்பதல்ல. அதன் பொருள் அவர் நோயாளி என்பதாகும். அதே போன்று தொழுகை மற்றும் இறை வணக்கத்திலிருந்து ஒருவர் இன்பம் பெறவில்லை எனில் அதன் பொருள் தொழுகையில் அவன் இன்பம் வைக்கவில்லை என்பதல்ல. அதில் அவன் இன்பம் வைத்துள்ளான்.

ஆனால், மனிதனது இயல்பு அவனது நோய், சுவையின்மை ஆகியவை அவனை இன்பத்தைப் பெற விடவில்லை. எனவே, நாம் சுவையும் இன்பமும் பெறத்தக்க விஷயத்தைத் தேட வேண்டும். வெறுமனே சுமையாகக் கருதி தலையிலிருந்து இறக்கி வைப்பது போன்று நடந்து கொள்ளக் கூடாது. அத்தகைய நிலை ஏற்பட்டால், நான் ஏற்கனவே கூறியது போன்று சிலர் நீண்ட இரவுகள் வரும்போது ஃபஜ்ர் தொழுகைக்கு வருகிறார்கள். சுருக்கமாக, இரவு வரும் போது ஃபஜ்ர் தொழுகைக்கு வருவதை விட்டு விடுகிறார்கள். ஆனல் தொடர்ந்து வருகின்ற அத்தகையோரின் கவனம் இறை வணக்கத்தில் இன்பத்தைப் பெறுவதன் பக்கம் இருக்கும். மற்ற தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கமும் கவனம் இருக்கும்.

பிறகு இன்பம் ரசனை என்ற கருத்தை மேலும் விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''சுருக்கமாக, நான் பார்க்கிறேன். மக்கள் தொழுகையில் கவனமற்றவர் –களாகவும் சோம்பல் காட்டுபவர்களாகவும் இருக்கின்றார்கள். காரணம் அவர்களுக்கு அல்லாஹ் தொழுகையில் வைத்துள்ள அதன் சுவை பற்றியும் இன்பம் பற்றியும் தெரிவதில்லை. அதற்கு மிக முக்கிய காரணம், அவர்களுக்கு அது தெரியவில்லை என்பதுதான். நகரங்களிலும் கிராமங்களிலும் இன்னும் அதிகம் சோம்பல் காணப்படுகிறது. நூற்றுக்கு ஐம்பது பேர் கூட தமது உண்மையான எஜமானனின் முன்பு தலை குனிவதில்லை. பிறகு எழும் கேள்வி என்னவெனில் ஏன் இவர்களுக்கு இந்த இன்பம் தெரிவதில்லை? இவர்கள் இந்த சுவையை ஒருபோதும் சுவைக்கவில்லை. மார்க்கங்களின் வழிபாடுகள் இவ்வாறல்ல. அதாவது நாம் நமது பணிகளால் பீடிக்கப்பட்டு இருக்கும் போது தொழுகைக்கு அழைப்பவர் பாங்கு கூறுகிறார். பிறகு அவர் அதனை கேட்கவும் விரும்பவில்லை. அவருடைய உள்ளம் துக்கமடைகின்றது. (அதாவது பாங்கு சப்தத்தைக் கேட்கவும் விரும்புவதில்லை. இப்போது தொழ வேண்டுமே என்று நினைக்கிறார் அல்லது கவனம் செலுத்துவதில்லை.) இத்தகைய மக்கள் மிகவும் கருணை காட்டதத்தக்கவர்கள். இன்னும் சிலர் இவ்வாறு இருக்கிறார்கள். அவர்களது கடைகள் பள்ளிவாயிலின் கீழ் இருக்கின்றன. ஒருநாளும் சென்று தொழுவதற்காக நிற்பதில்லை. எனவே, நான் விரும்புகிறேன். இறைவனிடம் மிகவும் உருக்கத்துடனும் உணர்வுடனும் இவ்வாறு துஆ கேட்க வேண்டும். எவ்வாறு பழங்களிலும் பிற பொருட்களிலும் விதவிதமான இன்பங்களை வைத்துள்ளாயோ அதுபோன்று தொழுகை மற்றும் இறை வணக்கத்தின் சுவையையும் நீ எமக்கு ஒருமுறை சுவைக்க வைப்பாயாக!''

அதாவது, உணவுப் பொருட்கள், பழங்கள் ஆகியவற்றில் சுவை இருக்கிறதல்லவா அதுபோன்று தொழுகையின் சுவையையும் சுவைக்கச் செய்வாயாக என்று துஆ செய்யும்படி கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''உண்டது நினைவில் இருக்கிறது. ஓர் அழகான தோற்றத்தை ஒருவர் மிகவும் ரசித்துப் பார்க்கிறார் எனில் அது நன்றாக நினைவில் இருக்கிறது. பிறகு ஒரு மோசமான தோற்றத்தை அருவருப்பானதை பார்க்கிறார் எனில் அதன் அனைத்து விஷயங்களும் உரு பெற்று அவன் முன்னால் வந்து விடுகின்றன.'' அழகிய தோற்றமும் நினைவில் இருக்கிறது. அருவருப்பான தோற்றமும் நினைவில் இருக்கிறது.

''ஆயினும், தொடர்பில்லை என்றால் எதுவும் நினைவில் நிற்பதில்லை. அதுபோன்று தொழுகையாளியின் பார்வையில் தொழுகை என்பது ஒரு தண்டனை ஆகும். எந்த நியாயமுமின்றி குளிரில் அதிகாலையில் எழுந்து அங்கங்களை சுத்தம் செய்து நிம்மதியான தூக்கத்தை விட்டு விட்டும் பலவகையான இன்பத்தை விட்டும் தொழச் செல்ல வேண்டியிருக்கிறது. அசல் விஷயமாவது, அவருக்கு அதில் நிம்மதியில்லை. அதனை அவரால் புரிய முடியவில்லை. தொழுகையிலுள்ள இன்பம் மற்றும் நிம்மதியைப் பற்றி தெரியவில்லை. பிறகு தொழுகையில் இன்பம் எவ்வாறு ஏற்படும்?''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ''நான் பார்க்கிறேன். ஒரு குடிகாரார், போதைப் பழக்கமுள்ள மனிதனுக்கு போதை வரவில்லை எனில் கோப்பை கோப்பையாக அருந்திக் கொண்டே செல்கிறார். ஒருவகை போதை வரும் வரை அவ்வாறு செய்கிறார். ஓர் அறிவாளியும் பெரிய மனிதருமாகிய ஒருவர் இதிலிருந்து பயன் பெற முடியும். (ஒரு போதைப் பழக்கமுள்ளவரிடம் இருந்தும் கூட ஓர் அறிவாளி படிப்பினை பெற முடியும். என்ன பயன் பெறலாம்?) தொழுகையைத் தொடர்ந்து தொழ வேண்டும். (இன்பம் கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி இன்பம் கிடைக்க அல்லாஹ்விடம் துஆவும் செய்ய வேண்டும். முறைப்படி தொழுது கொண்டும் இருக்க வேண்டும்.) அவருக்கு அதில் இன்பம் ஏற்படும் வரை தொழ வேண்டும். ஒரு குடிகாரனின் மனதில் எவ்வாறு இன்பம் பெற வேண்டும்? என்ற ஓர் எண்ணம் இருக்கிறதோ அதைப் போன்று மனிதனின் மனதிலுள்ள எல்லா ஆற்றல்களின் கவனமும் தொழுகையின் இன்பத்தைப் பெறுவதில் இருக்க வேண்டும். பிறகு ஒரு மாசற்ற தூய எழுச்சியுடன் குறைந்தபட்சம் ஒரு குடிகாரரைப் போன்றாவது ஓர் உருக்கம் உருவாகி விட்டால் அதில் துஆ இருக்கும் போது நிச்சயமாக நிச்சயமாக அந்த இன்பம் கிடைக்கிறது. பிறகு தொழும் போது அதிலிருக்கும் அந்த பயன்களை பெறும் நோக்கம் இருக்கும் போது, மனிதன் அவற்றை முன் வைக்கும் போது அது கிடைக்கிறது.

இறைவன் கூறுகிறான்: إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ (இன்னல் ஹஸனாத்தி யுஃஹிப்னஸ் ஸய்யிஆத்) (11:115) நன்மைகள் தீமைகளை அழித்து விடுகின்றன. எனவே, இந்த அழகுகளை இன்பங்களை உள்ளத்தில் வைத்து துஆ கேட்க வேண்டும். உண்மையாளர்கள் மற்றும் நன்மை செய்பவர்களின் தொழுகை தனக்கும் கிடைக்க வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ அதாவது நன்மைகள் அதாவது தொழுகைகள் தீமைகளை அகற்றி விடுகின்றன அல்லது இன்னோரிடத்தில் கூறுகின்றான். தொழுகை மானக்கேடான

தீமைகளிலிருந்து காப்பாற்றுகிறது. நாம் பார்க்கிறோம். சிலர் தொழுது கொண்டே தீமைகளைச் செய்கின்றனர். (இதுவும் உலகில் தென்படுகிறது. வெளிப்படையாக பெரிய தொழுகைளை தொழுகின்றனர். ஆனால், தீமைகள் செய்கின்றனர்.) இதற்குப் பதில் என்னவெனில் தொழுகிறார்கள். ஆனால் தொழுகையில் ஆன்மாவும் உயிரும் இருக்காது என்று நான் உண்மையாகவே கூறுகின்றேன். உண்மையுடன் ஆன்மாவின் ஆழத்திலிருந்து தொழுவதில்லை. மாறாக, சடங்கு சம்பிரதாயமாக குனிந்து நிமிர்கின்றனர். அவர்களின் ஆன்மா இறந்து கிடக்கிறது. அவற்றின் பெயரை அல்லாஹ் *ஹஸனாத்* என்று வைக்கவில்லை. எங்கு *ஹஸனாத்* என்று கூறியுள்ளானோ அந்த இடத்தில் *அஸ்ஸலாத்* என்று கூறவில்லை. பொருள் அதுதான் என்றாலும் கூட இதற்கு காரணம் தொழுகையின் அழகு சிறப்பு ஆகியவற்றை சுட்டிக் காட்டுவதாகும். அத்தகைய தொழுகை தீமைகளை அகற்றி விடுகிறது. அது தனக்குள் உண்மையின் உயிரைக் கொண்டுள்ளது. இறை அருளின் தாக்கம் அதில் இருக்கிறது. அந்த தொழுகை நிச்சயமாக தீமைகளை அகற்றுகிறது. தொழுகை எழுவது அமர்வது மட்டுமல்ல. தொழுகையின் சத்தும், உயிரும் ஓர் இன்பத்தை தன்னகத்தே கொண்டதுஆவாகும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 162-164; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு தொழுகையில் பல்வேறு நிலைமைகளைக் குறித்த ஞானம் இருக்க வேண்டும். அதன் தாக்கம் நம்மீது ஏற்பட வேண்டும் என்பதை விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ``நினைவில் கொள்ளுங்கள். தொழுகையில் நிலைமைகளும் சொல்லும் இணைவது அவசியமாகும்.'' அதாவது நம்மிடம் உருவாகக்கூடிய நிலை தொழுகையின் நிலையாக இருக்க வேண்டும். பிறகு, மனிதன் அல்லாஹ்விடம் பேசிக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வும் இருக்க வேண்டும். சில நேரங்களில் ஓர் உருவப்படத்தின் நிலை ஏற்படுகிறது. ஓர் உருவத்தின் வடிவம் காண்பிக்கப்படுகிறது. அதனைப் பார்ப்பவருக்கு இதுவே அல்லாஹ்வின் விருப்பம் என்று தெரிகிறது. அதுபோன்றே தொழுகையில் இறைவிருப்பத்தின் ஒரு நிழற்படம் தென்படுகிறது.'' தொழுகையில் பல்வேறு நிலைகளில் அல்லாஹ் மனிதனிடம் என்ன விரும்புகிறான்? என்பதன் உருவம் நிலை நாட்டப்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகிறார்கள்: ``தொழுகையில் நாவினால் சிறிது ஓதப்படுகிறது. அதேபோன்று உறுப்புகள் மற்றும் சில அசைவுகள் மூலம் சில விஷயம் காட்டியும் தரப்படுகின்றன.''

நாம் தொழும்போது நமது அசைவுகளும் அந்த வார்த்தைகளுக்கேற்ப வெளிப்பட வேண்டும். மனிதன் நிற்கிறான். *தஹ்மீது* மற்றும் *தஸ்ஃபீஹ்* செய்கிறான். அதற்கு நிற்றல் என்று பெயர் வைத்துள்ளான். இப்போது ஒவ்வொருவரும் அறிவர். புகழ் மற்றும் புகழ்வதற்கு ஏற்ற நிலை நிற்றல் ஆகும். மனிதன் நின்றவாறு அல்லாஹ்வுக்கு *தஹ்மீது, தஸ்ஃபீஹ்* செய்கின்றான். அதாவது, அல்லாஹ்வை புகழ்கின்றான். அவனது தூய்மையை எடுத்துக் கூறுகின்றான்.

``பாருங்கள். அரசர்களுக்கு முன் கவிதைகள் பாடப்படும்பொழுது நின்று கொண்டுதான் அதனை எடுத்து வைக்கின்றார்கள். இங்கு வெளிப்படையாக நிற்றலை வைத்திருக்கின்றான். நாவின் மூலம் புகழ் மற்றும் புகழ்ச்சியைக் கூற வேண்டும் என்றும் வைத்துள்ளான். இதன் பொருள், ஆன்மீகமாகவும் அல்லாஹ்வுக்கு முன் நிற்க வேண்டும்.'' இறைவன் முன் நின்றவாறு சூரா ஃபாத்திஹா ஓதுகின்றார். புகழ்தலைக் கூறுகிறார் எனில் அதன் தாக்கம் ஆன்மீகமான முறையிலும் அவரது உள்ளத்தில் இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ``ஒரு கருத்தில் நிலை நின்றவாறு புகழ்ச்சி (ஹம்து) செய்யப்படுகிறது. ஒருவரைப் புகழும்போது உண்மைப்படுத்தியவாறு அவர் ஒரு கருத்தின் மீது நிலை நிற்கிறார்.'' அது பொய்யான புகழுரையாக இருப்பதில்லை. ஒருவர் உண்மையான மனிதன் எனில் அவரை உண்மைப்படுத்திய பிறகே புகழ்கிறார். இது அல்ஹம்துலில்லாஹ் கூறுபவருக்கு அவசியமாவது, அவர் உண்மையான முறையில் அல்ஹம்துலில்லாஹ் எந்த நேரத்தில் கூற முடியும் எனில் எல்லா வகையான புகழும் அல்லாஹ்வுக்கே உரியது என்பதில் முழுமையான முறையில் அவருக்கு உறுதித்தன்மை ஏற்பட வேண்டும். இந்தக் கருத்து அனைத்து விரிவுரைகளுடன் உள்ளத்தில் அமர்ந்து விட்டால் அது ஆன்மீக நிற்றல் ஆகும். அல்லாஹ்வே எல்லாப் புகழுக்கும் உரியவன். அவனையே புகழ வேண்டும். அவனைத் தவிர புகழுக்குரியவன் இல்லை என்பது வெறும் கை கட்டி நின்று கூறுவதாக இல்லாமல் ஆன்மீக நிற்றலாகி விடுகிறது. ஏனெனில், உள்ளம் அதில் நிலை நின்று விடுகிறது. பிறகு, அவர் நிற்பதாகக் கருதப்படுவார். நிலைமைக்கேற்பவும் நின்று விட்டார். எனவே, அவருக்கு ஆன்மீக நிற்றலின் வாய்ப்பு கிடைத்து விடுகிறது. இது அவரது உள்ளத்தின் நிலையாகும். அதற்கேற்பவும் அவர் நின்று விட்டார்.

பிறகு ருகூவில் *சுப்ஹான ரப்பியல் அளீம்* கூறுகிறார். அடிப்படை விதியாவது ஒருவரின் மகத்துவத்தை ஒப்புக் கொள்ளும்போது அவருக்கு முன்பு குனிகிறார்கள். மகத்துவத்தின் விளைவு அவர் முன் குனிவதாகும். ஆகவே, *சுபுஹான ரப்பியல் அளீம்* என்று நாவால் கூறினார். தனது நிலைமையால் குனிந்து காட்டி விட்டார். நாவினால் அவனது மகத்துவத்தை வெளிப்படுத்தினார். அத்துடன் மனிதன் குனிந்தும் விட்டான். இவ்வாறு அவர் தனது சொல்லுடன் தனது நிலையையும் காட்டினார். அதாவது, எந்தவொரு வார்த்தை அவரது வாயிலிருந்து வந்ததோ அது அவரது குனிதலின் நிலையின் மூலமும் வெளிப்பட்டது. மூன்றாவது வார்த்தை *சுப்ஹான ரப்பியல் அஃலா* ஆகும். *அஃலா* என்பது மிகவும் உயர்ந்தது. மேன்மையை வழங்குவதன் செயல் வடிவமே ஸஜ்தாவின் நிலையாகும். இது மேன்மையின் மிக உயரிய வெளிப்பாடாகும். ஒரு பொருளின் மிக உயரிய மேன்மையை வெளிப்படுத்தும்போது அது இயல்பாகவே சிரம் பணிதலை விரும்புகிறது. அல்லாஹ்வின் தூய்மையையும் பெருமையையும் விளங்குவது ஒரு ஸஜ்தாவை விரும்புகிறது. எனவே, வெளிப்படையாக அதன் செயல் படம் ஸஜ்தாவில் விழுவதாக இருக்கிறது. இதனை ஒப்புக்கொள்வதற்கு உரிய பொருத்தமான வடிவத்தில் உடனடியாக அவர் வந்து விடுகின்றார். அவரது உள்ளத்தால் இறைவனது சிறப்பை ஏற்றுக் கொண்டார். அத்துடன் பூமியில் தலையையும் குனிந்து விட்டார். இது அதன் வெளிப்பாடாகும்.

ஆக, இந்த சொற்களுடன் மூன்று உடலளவிலான நிலை வைக்கப்பட்டுள்ளது. ஒரு படம் அவன் முன் வைக்கப்பட்டது. எல்லா வகையான நிலை நிற்றலும் அதில் செய்யப்பட்டது. நாக்கு அவனது உடலின் ஒரு பகுதியாகும். அதுவும் கூறியது. அதுவும் அதில் சேர்ந்து விட்டது. மூன்றாவது பொருள் வேறு ஒன்று அது இணையா விட்டால் தொழுகை தொழுகையாக இருக்காது. அது என்ன? அது உள்ளமாகும். அதற்கு அவசியமானது உள்ளம் நிலை நிற்க வேண்டும். அல்லாஹ் அதன் மீது பார்வையை செலுத்தினால் அவர் புகழவும் செய்கிறார். நிற்கவும் செய்கிறார். அவரது ஆன்மாவும் புகழ்கிறது. உடல் மட்டுமின்றி உள்ளமும் நிற்கிறது என்று அல்லாஹ் உள்ளத்தின் நிலையை அறிகிறான். உடலுடன் உள்ளமும் நிற்கிறது என்பதை அவன் அறிகிறான். அது குனிகிறது அல்லது ஸஜ்தா செய்கிறது என்பதை அறிகிறான். *சுப்ஹான ரப்பியல் அளீம்* என்று கூறும்போது மகத்துவத்தை ஒப்புக் கொள்வது மட்டுமின்றி குனியவும் செய்கிறார். அத்துடன் அவரது ஆன்மாவும் கூட குனிந்து விட்டது. இறைவனது மூன்றாவது பார்வையில் மனிதன் ஸஜ்தாவில் விழுகிறார். அவன் முன் அவனது மகிமையைப் பார்த்தவாறு இறைவனின் சன்னிதானத்தில் அவனது ஆன்மாவும் வீழ்ந்து கிடக்கிறது. அதாவது உள்ளமும் ஸஜ்தாவில் விழுகிறது. சுருக்கமான இந்த நிலை உருவாகாத வரை திருப்தியடையக் கூடாது. ஏனெனில் *யுகீமூனஸ்ஸலாத்த* என்பதன் பொருள் இதுவாகும். இந்த நிலையை எவ்வாறு உருவாக்குவது? என்று கேட்கப்படுமானால் அதற்கு பதில் இதுவாகும். அதாவது, தொழுகையை முறையாக தொழுங்கள். ஐயப்பாடுகள் சந்தேகங்களால் கஷ்டத்திற்குள்ளாக வேண்டாம். தொழுதவாறு ஐயங்களும் சந்தேகங்களும் வருகின்றன. அதனால் கஷ்டத்திற்குள்ளாக வேண்டாம். முறைப்படி தொழுது கொண்டே செல்லுங்கள். ஆரம்ப நிலையில் சந்தேகங்களால் ஒரு யுத்தம் கண்டிப்பாக ஏற்படுகிறது. ஆரம்பத்தில் ஐயங்கள் சந்தேகங்களுடன் நிச்சயமாக சண்டையிட வேண்டியுள்ளது. ஷய்த்தான் தாக்குதல் தொடுக்கிறான். ஷய்த்தானுடன் யுத்தம் தொடர்கிறது. இதற்கு சிகிச்சையாவது சோர்வடையாத உறுதி மற்றும் பொறுமையை மேற்கொள்ளுதல் ஆகும். இறைவனிடம் துஆ கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். இறுதியில் நான் கூறிய நிலை உருவாகி விடுகிறது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 433-435; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, நிரந்தரமான நிலைப்பாடு அவசியமாகும். இது மனிதனிடம் உருவாகி விட்டால் அல்லாஹ் தனது அடியாரிடம் ஓடி வருகிறான். பிறகு அல்லாஹ்வுடைய அருள்களும் இறங்குகின்றன. ஆனால், இந்த உண்மை நிலையை நிறைய பேர் புரிவதில்லை. அவரசப்பட்டு இறைவனின் வாசல் விட்டு விடுகின்றனர் அல்லது அதன் முக்கியத்துவத்தை உணர்வதில்லை. அதற்கு குறைந்த முக்கியத்துவம் உள்ளதாகக் கருதுகின்றனர். உலகவாதிகளின் பக்கம் ஓடுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்: ``பிறகு இன்னொரு விஷயம் நினைவில் கொள்ளத்தக்கது. தொழுகை அதன் அசல் பொருளில் தொழுகையாவது துஆவின் மூலமேயாகும். அல்லாஹ் அல்லாதவற்றிடம் கேட்பது நம்பிக்கை கொண்டவரின் தன்மானத்திற்கு மிகவும் எதிரானதாகும். ஏனெனில் துஆவின் உண்மையான அந்தஸ்து, இறைவனோடு தொடர்புடையது என்பதாகும்.'' ஒருவர் மற்றவரிடம் தொடர்பு கெள்ள வேண்டியிருக்கிறது. ஒருவர் மற்றவரிடம் சிலவற்றைக் கேட்கின்றனர். ஆனால், இறைவனின் கேட்க வேண்டியவற்றை அவனை விட்டு விட்டு வேறு ஒருவரிடம் கேட்பதும் வேறு ஒருவரைச் சார்ந்து நிற்பதும் தவறாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: ``எந்த மனிதன் முழுமையான முறையில் தன்னை சிறுமைப்படுத்திக் கொண்டு இறைவனிடம் கேட்க மாட்டனோ அவர் உண்மையான முறையில் முஸ்லிம் என்றும் உண்மையான முஃமின் என்றும் அழைக்கப்படத் தகுந்தவர் அல்ல. இஸ்லாத்தின் உண்மை நிலையாவது, எல்லா ஆற்றல்களையும் உட்புறமானதாக இருப்பினும் வெளிப்படையானதாக இருப்பினும் அவற்றை அல்லாஹ்வின் சன்னிதானத்தில் வீழ்த்தி விடுவதாகும். எவ்வாறு ஒரு பெரிய எஞ்சின் தனது அனைத்து உதிரிப் பாகங்களையும் இயக்கிக் கொண்டு செல்கிறதோ அதுபோன்றே எதுவரை மனிதன் தனது ஒவ்வொரு பணியையும், அசைவையும், அமைதியையும் அதே எஞ்சினின் உயர் ஆற்றலின் கீழ் கொண்டு வர மாட்டானோ அதுவரை அவர் எவ்வாறு அல்லாஹ்வின் இறைமையை ஒப்புக்

கொண்டவனாக முடியும்? மேலும் தன்னைப் பற்றி *இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ ஃபதரஸ் ஸமாவாத்தி வல் அர்ழ்* என்று கூறும் போது யதார்த்தத்தில் இறைவன் பக்கம் சாய்ந்தவராக எவ்வாறு வாயால் கூறுகிறாரோ அதே போன்று அவரது கவனமும் அவன் பக்கம் இருக்கும் எனில் சந்தேகமின்றி அவர் முஸ்லிம் ஆவார். அவர் நம்பிக்கை கொண்டவரும், இறைவன் பக்கம் குறிபவரும் ஆவார்.

"ஆனால், எவர் அல்லாஹ்வை விட்டு விட்டு அல்லாஹ் அல்லாதவரிடம் கேட்கிறாரோ அதாவது ஒருபுறம் அல்லாஹ்வின் பக்கம் குனிகிறார் அல்லது மறுபக்கம் குனிகிறார் அல்லது அல்லாஹ்வுடன் பிறவற்றைக் கலக்கிறார் என்றால், இத்தகையோர் நினைவில் கொள்ளவேண்டும். இவர் பெரும் பேரிழந்தவராவார். அவரிடம் அந்த நேரம் வரவிருக்கிறது. அப்போது அவர் வாயளவிலும் காட்டுவதற்காகவும் அல்லாஹ்வின் பக்கம் குனிய முடியாமல் போய் விடும்." பிறகு, அல்லாஹ் அவரை விரட்டி விடுகிறான். வெளிப்படையாகவும் குனிய முடியாமல் போய் விடுகிறார். அத்தகைய நேரம் அவரிடம் வருகிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: "தொழுகையை விடுதல் மற்றும் சோம்பலின் காரணமாக மனிதன் அல்லாஹ் அல்லாதவற்றிடம் குனியும் போது ஆன்மா மற்றும் உள்ளத்தின் ஆற்றல்கள் (ஆரம்பத்திலிருந்தே ஒரு பக்கமாகவே கிளைகளை படர விடப்பட்ட ஒரு மரம் போன்று) அப்பக்கமே குனிந்து விடுகிறது. இறைவன் புறமிருந்து ஒரு கடுமை உள்ளத்தில் உருவாகி அது அதனை அசையாத கல்லாகி விடுகிறது." அதாவது, ஒரு மரத்தை ஒரு பக்கமாக வைத்துக் கட்டி விட்டால் ஒருபுறமாக அது வளரத் தொடங்கி விடுகிறது. அதே போன்று மனிதன் அடியார்கள் பக்கம் குனிந்து விட்டால் பிறகு அடியார்கள் பக்கமே போய் விடுவான். பிறகு அல்லாஹ்வின் பக்கம் அவரது உள்ளம் கடினப்பட்டு விடுகிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: "பிறகு ஒருபுறமாக வளர்ந்த கிளையை மறுபுறமாக திரும்ப இயலாது. அதுபோன்று அந்த உள்ளமும் நாளுக்கு நாள் இறைவனை விட்டு தூர விலகிச் செல்ல ஆரம்பித்து விடுகிறது. எனவே, இது மிகவும் பயங்கரமானதும் உள்ளத்தை உலுக்கக் கூடியதுமான விஷயமும் ஆகும். மனிதன் அல்லாஹ்வை விட்டு பிறரிடம் கேட்பது அத்தகையதாகும். எனவே, தொழுகையை முறையாகப் பேணுவது மிக மிக அவசியமாகும். அதன் மூலம் உறுதியான பழக்கமாக அதில் நிலை நிற்க வேண்டும். இறைவன் பக்கம் திரும்புதல் ஏற்பட வேண்டும். பிறகு சிறிது சிறிதாக மனிதன் எல்லாவற்றின் தொடர்பையும் விட்டுவிடுவதில் ஓர் ஒளியையும் சுவையையும் தனதாக்கிக் கொள்கிறார்." முதலில் முயற்சி செய்து தொழ வேண்டும். மாசற்ற முறையில் அல்லாஹ்வின் முன் குனியும் வழக்கம் ஏற்பட்டு விட்டால் பிறகு அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகி விடுவார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: "இவ்விஷயத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். பரிதாபம்! அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் குனிவதன் தீமைகளை எடுத்துரைப்பதற்கு எனக்கு வார்த்தை கிடைக்கவில்லை. மக்களிடம் சென்று தமது விருப்பங்களைக் கேட்கின்றனர். இது இறைவனது தன்மானத்தை எழச் செய்கிறது. ஏனெனில் இதுவே மக்களின் தொழுகையாகும். அவன் அதனை விட்டு விலகி விடுகிறான். அதனை தூர எறிந்து விடுகிறான்."

"நான் இதனை கடினமான வார்த்தைகளில் கூறுகிறேன். அது இவ்வாறு இல்லாவிட்டாலும் எளிதில் புரிய முடியும்." இந்த விஷயங்கள் இவ்வாறு இல்லாவிட்டாலும் புரிய வைப்பதற்காக உலக உதாரணத்தைக் கூறுகிறேன். "ஒரு தன்மானமிக்க ஆண், தனது மனைவியை வேறு ஒருவருடன் தொடர்பு கொண்டிருப்பதைக் காண முடியாது. அத்தகைய தீய பெண்ணை சில நேரங்களில் கொலை செய்யத்தக்கவள் என்று கருதும் நிலையும் ஏற்பட்டு விடுகிறது. சிலர் அவ்வாறு இருக்கின்றனர்."

எனவே, அல்லாஹ்வின் அடியாராக இருப்பது மற்றும் துஆ ஆகியவை அல்லாஹ்வுக்கு மட்டுமே செய்ய வேண்டியவையாகும். எனவே வேறு ஒருவரை வணங்குவதை அல்லது அழைப்பதை அல்லாஹ் விரும்புவதில்லை. "எனவே நன்றாக நினைவில் கொள்ளுங்கள். மீண்டும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் குனிவது இறைவனை விட்டு துண்டிப்பதாகும். தொழுகை, தவ்ஹீது என்று பெயர் சொன்னாலும் தவ்ஹீதின் செயல் ஒப்புதலே தொழுகை ஆகும். தன்னிடம் இல்லாமை மற்றும் பணிவின் ஆன்மாவும் இறைவன் பக்கம் சாய்ந்த உள்ளமும் இல்லை என்றால் அத்தொழுகை பயனற்றதும் அருளற்றதும் ஆகும்."

நாங்கள் அதிகமாக அழுதோம். அதிகமாக தொழுதோம். எதுவும் கிடைக்கவில்லை என்று சிலர் கூறுகின்றனர். அத்தகையவர்களின் கருத்தை மறுத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "சிலரது எண்ணமாவது அல்லாஹ்வின் முன் அழுவதால் எதுவும் கிடைக்காது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். அத்தகைய மக்கள் அல்லாஹ்வின் இருப்பு மற்றும் அவனது வல்லமைகளைக் காட்டும் செயல்களின் மீது நம்பிக்கை கொள்வதில்லை. அவர்களிடம் உண்மையான ஈமான் இருந்தால் அவர்கள் அவ்வாறு கூறத் துணிய மாட்டார்கள். ஒரு மனிதர் அல்லாஹ்வின் முன் வந்து விட்டார். உண்மையான தவ்பாவுடன் அவன் முன் குனிகிறார் எனில் அல்லாஹ் அவர் மீது எப்போதும் அருள் செய்கிறான். ஒருவர் முற்றிலும் சரியாகக் கூறியுள்ளார். அதாவது, *தான் நேசிப்பவரின் பக்கம் தனது பார்வையைச் செலுத்தாத நிலையில் பிறகு அவர் என்ன நேசர்?* உனக்கு வலியே இல்லை. ஆனால் மருத்துவர் இருக்கத்தான் செய்கின்றார்? உமக்கு வலி இருக்கிறது என்பது தவறு. நீங்கள் தூய உள்ளத்தைக் கொண்டு வர வேண்டும் என்று அவன் விரும்புகிறான். அவனுக்கு ஏற்றவாறு அதற்கேற்ற நிலையை உங்களிடம் உருவாக்க வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனையாகும். (இது மிகப் பெரிய விஷயமாகும். அவன் என்ன கூறுகிறானோ அவ்வாறு நடங்கள்.) உண்மையான மாற்றம் உங்களை இறைவனிடம் செல்வதற்கு தகுதியானவராக்குகிறது. நான் உண்மையாகவே கூறுகிறேன். இறைவனிடம் வியக்கத்தக்க ஆற்றல்கள் உள்ளன. எல்லையற்ற அருளும் பரக்கத்துகளும் உள்ளன. ஆனால் அவற்றை பார்ப்பதற்கும் பெறுவதற்கும் அன்பின் கண்களை உருவாக்குங்கள். அல்லாஹ்வுடன் உண்மையான அன்பை உருவாக்குங்கள். உண்மையான அன்பு இருந்தால் அல்லாஹ் நிறைய துஆக்களை கேட்கிறான். உதவி செய்கிறன். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 352-353; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, நமது நிலைமையை அவ்வாறு ஆக்க வேண்டும். இறைவன் நமது துஆவை கேட்க வேண்டும். இறைவன் கேட்பதில்லை என்று ஆட்சேபனை செய்பவர்கள் பெரும்பாலோர் ஐவேளை தொழுகைகளைக் கூட முழுமையாகத் தொழுவதில்லை. பிறகு தொழுகையின் சிந்தனை கூட உலகியல் பிரச்சனைகள் வரும்போது தான் வருகிறது.

அல்லாஹ் கூறுகிறான்: நான் நிச்சயமாக கேட்பேன். ஆனால் நீங்கள் எனது கட்டளையின்படி நடங்கள். இறைவனது கட்டளையின்படி செயல்படுகின்றோமா என்று ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்யுங்கள். அல்லாஹ்விடம் உங்கள் முறையீடு இருக்கும் என்றால் முதலில் இந்த விஷயத்திற்குப் பதில் சொல்லுங்கள். அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், திருக்குர்ஆனில் 700 கட்டளைகள் உள்ளன என்று ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள். இந்த 700 கட்டளைகளுள் எதனை செயல்படுத்தினீர்கள்? பிறகு நீங்கள் இங்கு ஒப்பிட்டுப் பார்த்தால் அங்கும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு விட்டது. இறைவனது பெரிய கருணையானது இதற்கெல்லாம் பிறகும் கூட தனது அடியார்கள் மீது கருணை காட்டியவாறு அவனது அதிகமான காரியங்களைக் கண்டும் காணாமல் விட்டு விடுகின்றது. பிறகும் கூட அவனது சில துஆக்களை அவன் கேட்கவும் செய்கின்றான்.

பலர் இருக்கின்றார்கள். அவர்கள் தமது தொழுகைகளைக் கூட முறையாக தொழுவதில்லை. ஆனால் அவர்களது சில துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டன என்றால் அது இறைவனது கருணையாகும். இன்னும் சொல்வதாயின், இறைவன் தனது மற்ற பண்பின் கீழ் துஆவே செய்யாமல் கூட அவனது தேவைகளை நிறைவேற்றி விடுகிறான். எனவே, முறையீடு செய்வதற்கு இடமே இல்லை. நாம் அவனது கட்டளைகளின்படி நடக்க முயற்சி செய்ய வேண்டும். அதற்கேற்ப நமது இறைவணக்கங்கள் தொழுகைகள் மற்றும் பிற கடமைகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "எதுவரை மனிதன் முழுமையான தவ்ஹீதை கடைபிடிக்கவில்லையோ அதுவரை அவரிடம் இஸ்லாத்தின் மீதுள்ள அன்பு மற்றும் மகத்துவம் நிலை நிற்பதில்லை. தொழுகையில் இன்பமும் சுவையும் அவருக்கு கிடைக்காது. எதுவரை தீய விருப்பம், அசுத்தமான திட்டங்கள் எல்லாம் அழியாமலும் அகம்பாவமும் விரோதமும் விலகி ஒன்றுமற்ற தன்மையும் பணிவும் வராமலும் இருக்குமோ அதுவரை இறைவனது உண்மையான அடியார் ஆக முடியாது."

அவர்கள் கூறுகின்றார்கள்: "முழுமையான அடிமைத்தனத்தை கற்றுத் தருவதற்கு மிகச் சிறந்த பயிற்றுனரும், மிகச் சிறந்த வழியும் தொழுகையாகும். சரியான முழுமையான அடிமைத்தன்மை பெறுவதாயின் அதனை மிகச் சிறந்த முறையில் கற்பிப்பவர் (முஅல்லிம்) தொழுகை ஆகும்."

அவர்கள் கூறுகின்றார்கள்: "நான் மீண்டும் கூறுகிறேன். இறைவனுடன் உண்மையான தொடர்பை நிலைநாட்ட விரும்பினால் தொழுகையை நிலைநாட்டுங்கள்."

உங்கள் உடல் மட்டுமல்ல. உங்கள் நாவு மட்டுமல்ல. மாறாக, உங்கள் ஆன்மா வரை எல்லாமே தொழுகையாகி விட வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 170; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! நமது ஆன்மா, நமது உணர்வு எல்லாமே தொழுகையின் உரிமையைச் செலுத்தும் வகையில் நாம் நமது தொழுகைகளைப் பாதுகாப்பவராவோமாக!

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். அது கண்ணியத்திற்குரிய அஸ்கரி பேகம் சாஹிபா உடையதாகும். இவர் கராச்சியின் முன்னாள் அமீர் சேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார். 27 மார்ச் –ல் அமெரிக்காவில் சிறிது காலம் நோயுற்றிருந்த போது தமது 90வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

**1943 –ல்** இவருக்கு சேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபுடன் நிகாஹ் நடந்தது. தனது கணவருக்கு முன்பே **1944 –ல்** லாஹூரில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது கையில் பைஅத் செய்தார். வாழ்நாள் முழுவதும் கிலாஃபத்துடன் தனது வாக்குறுதியை உண்மையாகவும் பற்றுடனும் நிறைவேற்றினார்கள். சந்ததிகளையும் கிலாஃபத்துடன் தொடர்புடன்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*

# கிலாஃபத்தின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம்

மதிப்பிற்குரிய மவ்லானா குலாம் நபி சாஹிப் நியாஸ், காஷ்மீர் மாநிலப் பொறுப்புப் பிரச்சாரகர்

(பத்ர் 9 -வது இதழின் தொடர்ச்சி...)

மேற்குறிப்பிடப்பட்ட நபிமொழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனக்கு பிறகு கிலாஃபத் தோன்றுவது தொடர்பான நற்செய்தியை தனது உம்மத்திற்கு தெரிவித்தார்கள். மேலும் கலீஃபாக்களுக்கு கீழ்ப்படிந்து நடக்குமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஏனென்றால், இந்த விஷயத்தின் மூலமாகவே தோல்வி, பிரிவினை மற்றும் குழப்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்கின்ற மார்க்கத்தை நிலைபெறச் செய்வதற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் இதுவே வழியாகும். இந்த நபிமொழி அந்நூர் அதிகாரத்திலுள்ள இஸ்திக்லாஃப் (கிலாஃபத் தொடர்பான வாக்குறுதி வழங்கப்பட்டுள்ள) வசனத்தின் விளக்கத்தை தெளிவுபடுத்தி விட்டது. மேலும், கிலாஃபத் பற்றிய வாக்குறுதி நிரந்தரமானது. ஆனால், அதைப் பெறுவதற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் நம்பிக்கை கொள்வதும் பொருத்தமான நற்செயல்களைச் செய்வதும் கட்டாய நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நபிமொழி சுட்டிகாட்டுகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேற்கண்ட கட்டளையானது, ஒருபுறம் இந்த பூமியில் பிரதிநிதியாக இருந்து அதற்குரிய உரிமையை நிறைவேற்றுகின்ற அத்தகைய மக்கள் எப்போதும் இருந்து வருவார்கள் என்பதற்கான தெளிவான ஆதாரத்தை நமக்கு தருகின்றது. மறுபுறம், இஸ்லாத்தில் ஒன்றுபட்டிருப்பதன் தேவையையும் முக்கியத்துவத்தையும் இது வெளிப்படுத்துகின்றது. ஏனென்றால், இந்த நபிமொழியில் கட்டுப்பட்டு நடப்பதை தமது வழிமுறையாக ஆக்கிக் கொள்வது கட்டாயமானதாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த விஷயம் எந்த அளவு வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றதென்றால் ஒரு ஆப்பிரிக்க அடிமை உங்களுக்கு அரசராக இருந்தாலும் அவருக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

சுருக்கமாக, மனிதனின் இயல்புக்கேற்ற மார்க்கமான இஸ்லாம் ஒற்றுமையாக இருப்பதை ஆதரிப்பதோடு மட்டுமின்றி, அதன் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒன்றுபட்டிருப்பது ஓர் இமாம் இல்லாமல் சாத்தியமற்றதாகும். இதுவே லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் என்ற தூய கலிமாவின் அடிப்படையும் ஆகும். இந்தக் கலிமா நாம் ஒன்றுபட்டிருப்பதற்கான வலுவான உறுதியான ஓர் அடித்தளத்தை அமைத்துத் தருகின்றது. இந்தக் கலிமா இறைவனின் ஏகத்துவத்தையும் தூதுத்துவத்தையும் ஏற்றுக் கொள்வது என்பது மட்டுமல்ல. மாறாக, இது இஸ்லாமிய உலகின் ஒற்றுமைக்கான ஒரு வழியாகவும் இருக்கின்றது. இஸ்லாமிய உலகிற்கு மட்டும் அல்லாமல் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவும் போது அதன் மூலமாக உலக அமைதிக்கான உத்திரவாதம் உறுதியாகின்ற வகையில் அதற்கான அழிக்க முடியாத அடித்தளத்தையும் இந்தக் கலிமா அமைத்துத் தந்திருக்கின்றது.

இந்தக் கலிமா இஸ்லாமிய மார்க்கத்தின் சுருக்கமாகும். இதனையே அதன் எல்லா கிளைகளும் சுற்றி வருவதுடன் அதனோடு அவை இணைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே திருக்குர்ஆனில் அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களை அழைக்கும் போதெல்லாம் அவர்களைப் பன்மைச் சொற்களின் மூலமாகவே அழைக்கின்றான. உதாரணமாக, يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا யா அய்யுஹல்லதீன ஆமனூ- நம்பிக்கை கொண்டவர்களே! என்றே அவன் அழைக்கின்றான். அபூதாவூதில் ஒரு நபிமொழி இவ்வாறு வருகின்றது.

عَلَيْكُمْ بِالْجَمَاعَةِ فَاِنَّمَا يَأْكُلُ الذِّئْبُ مِنَ الْغَنَمِ الْقَاصِيَةَ "முஸ்லிம்களே! நீங்கள் இதனை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். உங்களது நிம்மதி மற்றும் பாதுகாப்பின் உத்திரவாதம் 'அல் - ஜமாஅத்' துடன் சேர்ந்து இருப்பதிலேயே இருக்கின்றது. நினைவில் கொள்ளுங்கள்! தமது மந்தையை விட்டும் பிரிந்து செல்கின்ற ஆடு ஓநாயின் உணவாக ஆகி விடுகின்றது."

### கிலாஃபத்தே ராஷிதா - நேர்வழிபெற்ற கிலாஃபத்திற்குப் பிறகுள்ள நிலைமைகள்:

தாருல் உலூம் தேவ்பந்தின் முன்னாள் நிர்வாகியான மவ்லானா மர்ஹூம் முஹம்மது தய்யிப் சாஹிப் அவர்கள் சிந்து மாகாணத்தில் **1944** -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஜம்யியத்தே உலமாயே ஹிந்து சார்பாக நடைபெற்ற கருத்தரங்கில் 'மார்க்கமும் அரசியலும்' என்ற தலைப்பில் தலைமையுரை நிகழ்த்தியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

"கிலாஃபத்தே ராஸிதா (நேர்வழிபெற்ற கிலாஃபத்) நிறைவுற்ற தருணத்தில் அதாவது உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்குப் பிறகு (அதாவது முக்கியமான மூன்று ஆற்றல்களை தன்னகத்தே கொண்டிருந்த அல்லது அதன் முழு வடிவமாகத் திகழ்ந்த விரைவாகக் கிடைத்த பல வெற்றிகளின் உண்மையான அந்த காலக்கட்டத்திற்கு பிறகு) முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு முதல் காரணமாக அந்த வெற்றிகள் இருந்தன. பிறகு, நாடுகள் கை நழுவிப் போக ஆரம்பித்தன. பிறகு உட்புற பலவீனங்கள் பெருகி பின்னடைவு ஏற்பட்டது. இறுதியில் வீழ்ச்சி மற்றும் பிறரது ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற நாட்கள் வர ஆரம்பித்தன."

பிறகு தொடர்ந்து கூறுகின்றார்கள்: இதற்குக் காரணம் முஸ்லிம்களின் கண்களுக்கு முன்னால் அவர்கள் சென்று சேர வேண்டிய இலக்கு இல்லாமல் இருந்தது மட்டுமேயாகும். இலக்கு அவர்களுக்கு தெரிந்திருந்தாலும் கூட அதை அடைவதற்கான வழி அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. வழி தெரிந்திருந்தாலும் கூட அதில் நடந்து செல்வதற்கான நல்லொழுக்கத்தின் ஆற்றல் அவர்களிடம் இருக்கவில்லை. அந்த நல்லொழுக்க ஆற்றல் அவர்களிடம் இருந்தாலும் கூட அவர்களை தமது ஞானத்திற்கேற்ப ஓர் அமைப்பின் கீழ் வழிநடத்திச் செல்கின்ற ஒரு தலைமையகமோ ஓர் இமாமோ அவர்களுக்கு இருக்கவில்லை. அவ்வாறு ஒரு நபர் இருந்தாலும் கூட காழ்ப்புணர்ச்சியானது அவரைப் பின்பற்றிச் செல்வதற்கான அனுமதியை அவர்களுக்கு வழங்கவில்லை.

சுருக்கமாக, இந்த மூன்று ஆற்றல்கள் அவர்களிடம் இருக்கவில்லை. அதாவது அறிவின் ஆற்றல், நல்லொழுக்க ஆற்றல், நிர்வாக ஆற்றல் ஆகியவற்றில் வீழ்ச்சி அடைந்ததுதான் இந்தத் தீய விளைவுகளுக்கான காரணமாக ஆகிக் கொண்டிருந்தன. (குத்பாத்தே ஹகீமுல் இஸ்லாம், தொகுதி 5 பக்கம் 467, மக்தபா ரஷிதிய்யா தேவ்பந்தின் வெளியீடு - புதிய பதிப்பு)

### கிலாஃபத்துடன் ஒன்றியிருக்க வேண்டும் என்ற வழிகாட்டல்:

முஸ்லிம் சமுதாயம் வரவிருக்கும் ஒரு காலக்கட்டத்தில் தமது செயல்களின் விளைவாக கிலாஃபத்தின் அருளிலிருந்து புறக்கணிக்கப்பட்டு விடும் என்று நபிமொழிகளிலிருந்து தெரிய வருகிறது. இன்று முழு இஸ்லாமிய உலகிற்கும் கிலாஃபத் இல்லாமல் அது கடிவாளம் இல்லாத குதிரையைப் போன்று இருக்கின்றது என்ற உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. எனவேதான், அல்லாஹ்வும் அவனது அன்பிற்குரிய தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களும் இதற்கான சிகிச்சையைக் கிலாஃபத்தில் அருட்கொடையுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்துபோய் விடாதீர்கள். சிதறுண்டு போய் விடாதீர்கள் என்று கூறுகிறான். அல்லாஹ்வின் கயிறு என்பதற்கு திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாம் என பொருள் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இஸ்லாமிய கிலாஃபத் என்றும் அதற்கு ஹஸ்ரத் ஸய்யிது வலியுல்லாஹ் ஷா சாஹிப் முஹத்தஸ் தெஹ்லவி அவர்கள் பொருள் கொடுத்துள்ளார்கள். அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் கயிறு என்பதன் கருத்து உண்மையான இஸ்லாமிய கிலாஃபத் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 | Thursday 19 MAY 2016 | Issue No. 11

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

اِقْتَدُوْا بِالَّذِيْنَ مَنْ بَعْدِى اَبِى بَكْرٍ وَعُمَر فَاِنَّهُمَا حَبْلُ اللّٰهِ الْمَمْدُودِ فَمَنْ تَمَسَّكَ بِهِمَا فَقَدْ تَمَسَّكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا

*அதாவது எனக்குப் பிறகு அபூபக்கரையும், உமரையும் பின்பற்றிச் செல்லுங்கள். ஏனெனில் அவர்கள் இருவரும் இறைவனின் நீளமான இரு கயிறுகள் ஆவர். எவர்கள் இவ்விருவரையும் வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்வாரோ அவர் உடையாத பொருள் ஒன்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார்.'' (இஸாலதுல் குலஃபா, பக்கம் 64)*

**கிலாஃகத்தே ராஷிதாவின் தோற்றம்:**

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு, எல்லா நபித் தோழர்களும் ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்யும் நற்பேற்றைப் பெற்றனர். அவர்களுக்குப் பிறகு ஸய்யிதுனா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் கனி (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலி கர்ரமல்லாஹு த்தஆலா (ரலி) அவர்கள் ஆகியோர் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். முஸ்லிம் சமுதாயம் இத்தகு உன்னத தகுதியிலிருந்த சான்றோர்களிடம் பைஅத் செய்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டு இருப்பதையும் உண்மையான இஸ்லாமிய கிலாஃபத்தின் தலைமையின் கீழ் செயல்படுவதையும் செயலளவில் செய்து காட்டினர்.

இந்த எல்லா கண்ணியமிக்க கலீஃபாக்களும் தமது உயிரை இவ்வழியில் அர்ப்பணித்து உழைப்புடனும் ஞானத்துடனும் மார்க்கத்தைப் புதுப்பிக்கும் பணியைச் செய்தனர். அப்பணிகள் இஸ்லாமிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் -பட்டுள்ளது. இந்த சான்றோர்கள் வராமல் இருந்திருந்தால் மார்க்கத்திற்கு என்ன வடிவம் கிடைத்திருக்கும்? என்பது தெரியாது. இந்த உயர் தகுதியிலுள்ள சான்றோர்களின் காரணமாகத்தான் மார்க்கத்திற்கு அதிக வலிமை கிடைத்துள்ளது. இஸ்லாம், அரபு நாட்டின் எல்லைகளைக் கடந்து மிகத் தொலைவு வரை அதன் ஒளி பரவியது.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கிலாஃபத்தே ராஷிதாவின் முதல் காலக்கட்டம் 30 வருடங்கள்வரை நீடிக்கும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் الخلافة ثلاثون سنة அதாவது கிலாஃபத் 30 வருடங்கள் வரை இருக்கும் என்று கூறினார்கள். (மிஷ்காத்துல் மஸாஃபீஹ். கிதாபுல் ஃபதன், பக்கம் 463)

கிலாஃபத்தே ராஷிதாவிற்கு பிறகு முஸ்லிம் உம்மத்திற்கு விதிக்கப்பட்டிருந்த பின்னடைவு மற்றும் வீழ்ச்சியின் காலக்கட்டம் தொடர்பாக மேலான இறைவன் தனது அன்பிற்குரிய நபி முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தான், எனவேதான் அவர்கள் ஆரம்பத்தில் நானும் இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இருக்க இந்த சமுதாயம் ஒரு போதும் அழிந்து போகாது (கன்ஸுல் உம்மால். ஜாமிஉல் மஃபர், பக்கம் 104) என்று கூறி முதலிலேயே தமது சமுதாயத்திற்கு நற்செய்தி வழங்கியுள்ளார்கள்.

---

*(குத்பா தொடர்ச்சி...)*

இருக்குமாறு வலியுறுத்தினார்கள். கிலாஃபத்தை மிகவும் மதிப்பவராக இருந்தார்கள். M.T.A தொடங்கியதிலிருந்து அதனை பார்ப்பது அவர்களது அன்பிற்குரிய பொழுதுபோக்காக இருந்தது. வஸிய்யத் செய்தவராக இருந்தார். பொறுமையுடையவரும், நன்றி செலுத்துபவரும் துஆ செய்பவரும் தஹஜ்ஜுத் தொழுபவரும் தொழுகை நோன்புகளை பேணுபவராகவும் அவர்கள் இருந்தார்கள். திருக்குர்ஆனை முழுமையாக ஓதுபவராக இருந்தார்கள். தனது கணவருடன் கராச்சியில் தொண்டு செய்யும் வாய்ப்பினைப் பெற்றார்கள். அப்போது அவரும் அவருடன் தோளுடன் தோள் நின்று தொண்டு செய்து வந்தார்கள். விருந்தோம்பல் இவரது சிறப்புப் பண்பாக இருந்தது. சேக் சாஹிப் கராச்சி ஜமாஅத்தின் அமீராக இருந்த போது அவருக்கு பல பணிகள் இருந்தன. அதிக விருந்தோம்பலும் இருந்தது. அந்த பொறுப்புகளை நன்றாக செய்தார்கள். இவர்கள் முஸ்லிஹ் மவ்வூது மற்றும் மூன்றாவது கலீஃபா மற்றும் நான்காவது கலீஃபா ஆகியோருக்கு விருந்தோம்பல் செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார்கள். பொருள் தியாகத்திலும் மிகவும் முன்னேறி இருந்தார்கள். 1950 –ல் ஜமாஅத்திற்கு பொருளாதார கஷ்டம் வந்த போது முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சிறப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். இதற்காக சேக் சாஹிபான இவரது கணவர் தனது வருமானத்தின் பெரும் பகுதியை ஜமாஅத்திற்காக தியாகம் செய்து வந்தார்கள். இவரும் அவருடன் முறைப்படி பொருள் தியாகத்தில் தொடர்ந்து பங்கெடுத்தார்கள். மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். வெளிப்பகட்டிலிருந்து தூய்மையான பெண்ணாக இருந்தார்கள்.

இவரது மகன் எழுதுகிறார்: பெரும்பாலும் கலீஃபத்துல் மஸீஹிடம் துஆவுக்கு கடிதம் எழுதுமாறு மகன்களிடம் கூறி வந்தார்கள். இவர் தனக்குப் பின்னால் 5 மகன்கள், 2 மகள்களையும் மகன் வழியிலும், மகள் வழியிலும் 43 பேரன் பேத்திகளை நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். இவரது ஒரு மகன் கண்ணியத்திற்குரிய டாக்டர் நஸீம் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் ஆவார்கள். அவர்கள் அமெரிக்கா ஜமாஅத்தில் நாயிப் அமீராக இருக்கிறார்கள். நமது alislam.org இணையதளத்தில் இன்சார்ஜ் ஆவார்கள். இதே போன்று இவரது மருமகன் ரஹ்மானி சாஹிப் இங்கு வசிக்கிறார்கள். இவர் வஸிய்யத் செயலராக நீண்ட காலமாக இருந்தார்கள். இவரது மனைவி ஜமிலா ரஹ்மானும் கூட தமது வட்டத்தின் பொருளாளராகவும் பிற தொண்டுகளும் ஆற்றியுள்ளர்கள்; ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவரது ஒரு மகன் ஃபர்ஹத்துல்லாஹ் சேக் சாஹிப் பைஸலாபாத் நகரின் நாயிப் அமீராக இருக்கிறார்கள்.

அல்லாஹ் மர்ஹுமாவின் தகுதியை உயர்த்துவானாக! இவரது சந்ததிகளையும் தலைமுறைகளையும் கூட ஜமாஅத்துடன் தொடர்புடையவர்களாக ஆக்குவானாக!

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

அதாவது அப்துல் ஹக்கீம் பற்றிய முடிவை எனக்கு தெரிவித்துள்ளான். பிறகு மகிழ்ச்சி அடைவதற்கு இதில் என்ன இருக்கின்றது? சற்று பொறுமையாக இருந்து முடிவைப் பாருங்கள். ஓர் அறிவற்ற முர்தத் மார்க்கத்தை விட்டு விட்டுச் சென்று விட்டதற்காக இந்த அளவு ஏன் மகிழ்ச்சியடைகின்றனர்? என்பது வியப்பிற்குரிய இடமாகும். இறைவன் நம் மீது அருள் புரிந்துள்ளான். துரதிஷ்டவசமாக ஒருவர் முர்தத் ஆகி விட்டால் அவரது இடத்தில் ஆயிரம் பேர் வருகின்றனர். இதைத் தவிர ஒருவர் முர்தத் ஆகி சென்று விடுவதால் எந்த இயக்கத்தில் இருந்து இந்த முர்தத் வெளியேறினாரோ அது உண்மையில் இல்லை என்ற விளைவு வெளிப்படுகின்றதா? என்ன? ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் பல பாக்கியமற்றவர்கள் அவர்களை விட்டும் முர்தத் ஆகிச் சென்று விட்டனர் என்பதைப் பற்றி நமது எதிரி ஆலிம்களுக்கு தெரியாதா? பிறகு பல மக்களும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விட்டும் முர்தத் ஆகிச் சென்று விட்டனர். பிறக பல பாக்கியமற்றவர் -களும் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அவர்களை விட்டு விட்டு முர்தத்துகளாகி விட்டனர். முஸைலமா, கஸ்ஸாபும் முர்தத் ஆகிச் சென்றவர்களில் ஒருவனாவான்.

எனவே, அப்துல் ஹகீம் முர்தத் ஆகி சென்று விட்டதற்காக மகிழ்வதும் அதனை இந்த உண்மையான இயக்கத்தை பொய்ப்படுத்துவதற்கான ஓர் ஆதாரமாக ஆக்குவதும் முழுக்க முழுக்க அறிவற்றவர்களாக இருக்கின்ற மக்களின் பணியாகும். எனினும் இம்மக்கள் சில நாட்களுக்காக ஒரு பொய்யான மகிழ்ச்சிக்குக் காரணமாக கண்டிப்பாக ஆகி விடுகின்றனர். ஆனால் அந்த மகிழ்ச்சி விரைவாக அழிந்து விடுகின்றது.

இந்த அப்துல் ஹகீம் கான், தனது ஒரு நூலில் எனது பெயரைக் கூறி ஒரு நபர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற இவர்களது வாதத்தை மறுப்பவராக இருந்தார். மறுக்கக்கூடிய இவர் பிளேக் நோயால் இறந்து விடுவார் என்று எனக்கு கனவில் காட்டப்பட்டது. அவ்வாறே அவர் பிளேக் நோயால் மரணித்தார் என்று எழுதியுள்ளார். ஆனால், இப்போது முர்தத் ஆகி விட்டு அவமரியாதையாக ஏசிப் பேசி மிகவும் தீய வார்த்தைகளைக் கூறி பொய்யான அவதூறுகளை இவர் என் மீது சுமத்துகின்றார். இப்போது பிளேக் நோயின் நேரம் (கடந்து) சென்று விட்டதா என்ன?

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 126-127)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad